**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP - 99/2019**

**நாள் – 03.07.2025**

**PW – 2** : வெங்கடாசலம்

**த/பெ.** : ஆறுமுகம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of July 2025)**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சி சொல்ல வேண்டி நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரர்கள் அழைத்ததின் பேரில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். விபத்தில் இறந்துபோன ராமசாமி எனது சித்தப்பா என்றால் சரிதான். நாங்கள் ஒரு பெரிய காரியத்திற்கு போகும் போது விபத்து ஏற்பட்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், எனது மனைவியும் ஒரு இருசக்கர வாகனத்திலும், எனது சித்தப்பா ராமசாமி ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். மேற்கிலிருந்து கிழக்காக சென்று வடக்காக திரும்பும் போது எதிரே வந்த டாடா ஏசி எனது சித்தப்பா ராமசாமி மீது மோதி விட்டது. எனக்கு இந்த விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றும், அதனால் தான் எனது பிரமாண வாக்குமூலத்தில் டாடா ஏசி வாகனம் எனது சித்தப்பாவின் பின்புறமாக மோதி விட்டதாக முன்னுக்கு பின் முரணான வகையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சாலை குறுகிய சாலை என்றால் சரிதான். எனது சித்தப்பா எனக்கு முன்பாக சுமார் 15 அடி துாரத்தில் சென்று கொண்டிருந்தார்.

எனது சித்தப்பா ராமசாமி விபத்து சமயம் தலைக்கவசம் அணிந்திருந்தாரா? என்று எனக்கு ஞாபகமில்லை.

2. எனது சித்தப்பா தலைக்கவசம் போடாமல் சென்றதால் தான் அவருக்கு விபத்தில் தலையில் பலத்த அடிபட்டு விட்டது என்றும், தலைக்கவசம் அணிந்திருந்தால் விபத்தில் பலத்த காயம் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. எனது சித்தப்பா ராமசாமி விபத்து சமயம் மெதுவாக தான் வண்டியை ஓட்டிச் சென்றார். நான் இந்த விபத்து சம்பந்தமான குற்ற வழக்கில் சாட்சியமளித்துள்ளேன். நான் விபத்தை நேரில் பார்க்காமல் இறந்த போன ராமசாமி எனது சித்தப்பா என்ற முறையில் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ராமசாமியின் மகள் பேபி தான் புகார் கொடுத்தார். அந்த பேபி விபத்து சமயம் எங்களுடன் வரவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.03 14:55:02 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**